**தலைப்பு 149 – கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 149 - கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 27 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 9,435.51 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 8,195.57 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,239.94 மில்லியன் அதாவது 13.14 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1970.17 | 1,773.48 | 196.69 | 9.98 |
| மூலதனம் | 7,465.34 | 6,422.09 | 1,043.25 | 13.97 |
| மொத்தம் | 9,435.51 | 8,195.57 | 1,239.94 | 13.14 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 14901 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 20.00 | 19.93 | 13.00 | 14.91 | 60.00 | 50.35 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 70.03 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0066/000 | 0.10 |
| 6000/0000/00/0016/0018/000 | 60.34 |
| 6000/0000/00/0018/0022/000 | 2.01 |
| 6000/0000/00/0013/0031/000 | 7.58 |
| மொத்தம் | 70.03 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 11 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 28,733,500 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 32 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புக்கள் அச் செலவின விடயங்களுக்கான தேறிய நிதிஏற்பாட்டில் 32 சதவீதத்திலிருந்து 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது வைப்புக் கணக்கில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 15,338,514 கூட்டுமொத்தமான வைப்பு மீதிகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 14901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 100,208 ஆக இருந்தது. அந்த நிலுவை மீதிகள் 7 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 3.5 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (i) நிதிப்பிரமாணம் 94(1) | 10 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி ரூபா 81,886,596 கூட்டுத் தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 113(4) | கூட்டுறவுச் சங்கங்களில் காணப்பட்ட ரூபா 100,000,000 தொகையான கடனைப் பதிவழிப்பதற்கு வழங்கப்பட்ட புத்தகத்திலிருந்து அகற்றுவதற்கான கட்டளையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| **(ஆ) பாதீட்டுச் சுற்றறிக்கை** | |
| 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 1202 - எரிபொருள் செலவின விடயத்திற்கும் மற்றும் 1401 - போக்குவரத்துச் செலவின விடயத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் முறையே 15 சதவீதம் மற்றும் 10 சதவீதம் என கட்டாயமாக சேமிக்க வேண்டியிருந்தது. எனினும் அமைச்சினால் அந்த செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட முழுமையான நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டு நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஏனைய செலவின விடயங்களிலிருந்து நிதிஏற்பாடு மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. |

## 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்

செயற்திட்டத்திற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 320,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், உரிய செயற்திட்டத்தின் பணிகளேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 07 கைத்தொழில் கிராமங்களின் நிர்மாணங்களுக்காக ரூபா 153,880,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் போதியளவு பௌதீக செயல் முன்னேற்றம் அடையப் பெற்றிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கைத்தொழில் கிராமங்களை நிர்மாணிப்பதற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உரிய காணி இனங்காணப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 02 கைத்தொழில் கிராமங்களில் அவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 69 | 54 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 06 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 683 | 525 | 158 |
| (iv) | ஆரம்ப நிலை | 135 | 120 | 15 |
| (v) | ஏனையவை(ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | மொத்தம் | 895 | 706 | 189 |